# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 11 புதன்கிழமை 25.06.2025 கதிர் 235



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிட்ட வோல்கர்





யாழ்ப்பாணம், ஜூன் 25

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு இன்று பிற்பகல் ஹெலியூடாக வருகை தந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் பிற்பகல் 4.30 மணியளவில் செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனித புதைகுழியைப் பார்வையிட்டார்.

சுமார் 30 நிமிடங்கள் வரையில் செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிட்ட அவர், பல்வேறு தரப்புகளுடனும் கலந்துரையாடினர்

# ‘அணையா விளக்கு’ களத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்திய ஐ.நா. ஆணையாளர் வோல்கர்

## கோரிக்கைகள் அடங்கிய மகஜர் அவரிடம் கையளிப்பு





யாழ்ப்பாணம், ஜூன் 25

**யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரிய ‘அணையா விளக்கு’ போராட்டக் களத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.**

7

## சந்திரசேகர் தலைமையிலான குழுவும் செம்மணியில் இருந்து வெளியேற்றம்!



யாழ்ப்பாணம், ஜூன் 25

செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரிய ‘அணையா விளக்கு’ போராட்டக்களத்துக்கு இன்று சென்று அமைச்சர் இராமலிங்கம்

7



## செம்மணிப் போராட்டக் களத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழரசின் தலைவர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம், செம்மணி பகுதியில் நடைபெற்று வரும் “அணையா விளக்கு’ போராட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற வடக்கு மாகாண சபை அவைத்தலைவரும், தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் போராட்டக் களத்தில் நின்ற மக்களால் அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளார்.

செம்மணியில் நடைபெற்று வரும் “அணையா

7

# உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முயற்சிப்போம்!

## திருகோணமலையில் பாதிக்கப்பட்டோர் நடத்திய கவனவீர்ப்பில் கலந்துகொண்ட வோல்கர் உறுதி

திருகோணமலை, ஜூன் 25

திருகோணமலை மாவட்டத்துக்கு இன்று முற்பகல் விஜயம் மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கை

7





- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பகிடிவதை விவகாரம்– ஒலுவில் பல்கலை 22 மாணவர்கள் இடைநீக்கம்!

கொழும்பு, ஜூன் 25

பகிடிவதை சம்பவத்தில் ஈடுபட்ட ஒலுவில் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 22 மாணவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக குறித்த பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஒலுவில் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த இரண்டாம் ஆண்டு மாணவர்கள் குழு ஒன்று முதலாம் ஆண்டு மாணவர்களை பகிடிவதை செய்த சம்பவம் தொடர்பில் 22 மாணவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் குறித்து முறையான விசாரணை நடத்த பல்கலைக்கழக பேராசிரியர்கள் கொண்ட ஒரு சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சம்பவம் தொடர்பான விசாரணையின் அடிப்படையில் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாமாண்டு மாணவர்கள் கடுமையான பகிடிவதைக்கு உட்படுவது போன்ற காணொளி ஒன்று தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகி வருகின்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டில்பயிலும்மாணவர்கள்குழுவொன்று அதிகாலை 2 மணியளவில் முதலாமாண்டு மாணவர்களின் விடுதி அறைகளுக்குள் நுழைந்து முழந்தாளிடச் செய்து கடுமையாக துன்புறுத்தி தாக்கும் வகையிலான காணொளி வெளியாகியுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான மாணவர்களுள் ஒருவர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் மருத்துவ சிகிச்சைப் பெற வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளார்.

இதுபோன்று பல தடவைகள் கடுமையான தாக்குதலுக்கு இலக்கான மாணவர்கள் பல்கலையின் மேலிடத்தில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

எனினும் குறித்த விடயம் தொடர்பில் புதிய துணைவேந்தராக பதவியேற்ற பேராசிரியர் எஸ். எம். ஜ/னைதீனை தொடர்பு கொண்ட போதிலும் அவர் பதிலளிப்பதில் இருந்து தவிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி 5 கோடி ரூபா மோசடி செய்த நபர் கைது!

*கொழும்பு, ஜூன் 25*

*கொழும்பு, கிருலப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*குறித்த கைது நடவடிக்கை நேற்று (24) மாலை இடம்பெற்றது.*

*கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர், கொழும்பு மத்திய பிரிவு குற்ற விசாரணை பணியகத்தின் அதிகாரிகள் குழுவொன்று விசாரணை நடத்தி இந்த சந்தேகநபரைக் கைது செய்தது.*

*தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.*

*குறித்த நபர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி, சுமார் 150 பேரிடமிருந்து 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்தமை தெரியவந்துள்ளது.*

*சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொம்பனித்தெரு பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## எம்.பிக்களுக்கு வரிவிதிப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி

கொழும்பு, ஜூன் 25

நாடாளுளுமன்ற உறுப்பினர்களுக்காக நிகழ்நிலை வரி அறிக்கை சமர்ப்பிப்பு உட்பட வரிவிதிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அறிக்கையின்படி, கடந்த வாரம் பாராளுமன்றத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் துணை ஆணையர் ஜெனரல் பி.கே.எஸ். சாந்தா மற்றும் அதிகாரிகள் குழு இந்த நிகழ்ச்சியில் வளவாளர்களாக பங்கேற்றனர்.

அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற சேவைகள் பணிப்பாளர் ஃ நாடாளுமன்றத்தின் தகவல் தொடர்பு பணிப்பாளர் (செயல்) ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

(ஐ)



# மன்னார் மாவட்ட துறைமுகம் பேசாலையில் அமையும்








மன்னார, ஜூன் 25

இந்திய மீனவர்களின் அத்து மீறலை முற்று முழுதாக தடுக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது எனவும், மன்னார் மாவட்டத்திற்குரியதுறைமுகம் பேசாலையில் அமைய உள்ளது எனவும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகர் தெரிவித்தார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் மன்னார் மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (24) அன்று மன்னார்மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவ சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்த கூட்டம் முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடற்படையினரால்கையகப்படுத்தப்பட்டுள்ளகாணிகளை விடுவிப்பது பற்றியும் பேசப்பட்டது. அதற்குரிய நடவடிக்கையை கடற்படையினர் எடுப்பார்கள்என்ற நம்பிக்கை உள்ளது."-

மன்னார் மாவட்டத்திற்கானதுறை முகமொன்று கிடையாது. எனவே, பேசாலையில் துறை முகமொன்றை அமைப்பதற்கு திட்டமிட்டு, அதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றது. எனினும், குறித்த துறைமுகம் தொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகம் உள்ளது.

அந்த சந்தேகத்தை நாம் நீக்க வேண்டும். அரசாங்க அதிபர், அதிகாரிகள் உள்ளிட்டோர் மக்களை சந்தித்து கலந்துரையாடி, துறைமுகத்தின் முக்கியத்துவம்பற்றி விளக்கமளிக்கவேண்டும்.

அதேவேளை, இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு தொடர்பிலும் பேசப்பட்டது. இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்துமாறுமீனவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு கடற்படையினரும் உரிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

எதிர்காலத்தில்இந்திய மீனவர்களின் வருகையை முற்று முழுமையாக நிறுத்த முடியும் என நம்புகின்றோம். இராஜதந்திர மட்டத்திலும்நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது." என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மேலும் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர் ரத்ன கமகே, வடக்கு, கிழக்கில் மீனவர்களை சந்தித்து வருகிறோம். மாவட்ட, மாகாண மட்டத்தில் பிரச்சினைகள் தீர்க்கப்படும்வருகின்றன.

மன்னார், பேசாலையில் 2026 இல் மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படும். இதற்கு உலக வங்கி ஆதரவு பெறப்படும். அதேபோல் மீனவர்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகள் தீர்க்கப்படும்."என்றார்.

இந்திய மீனவர்களின் வருகை தற்போது குறைந்துள்ளதாகவும், அதற்கு நடவடிக்கை எடுத்த அமைச்சர்கள் மற்றும் கடற்படையினருக்கு மன்னார் மாவட்ட மீனவ பிரதிநிதிகள் இதன்போது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே உள்ளிட்ட பல பிராந்திய அரசியல் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அத்துடன், அமைச்சின் மேலதிக செயலாளர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், கடலோரப் பாதுகாப்பு திணைக்களம், பொலிஸார், சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் பல முக்கிய கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள், அத்துடன் கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை கடற்றொழில் துறைமுக கூட்டுத்தாபனம், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், நாரா (NARA) நிறுவனம் மற்றும் நாக்டா (NAQDA) நிறுவனம் ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் தலைவர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

# போதைப்பொருளுக்கு எதிராக இளைஞர்கள்




*வாழைச்சேனை, ஜூன் 25*

*வாழைச்சேனை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட நாவலடிபகுதியில்போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் குற்றச்சாட்டின் பேரில் செவ்வாய்க்கிழமை அன்றுபொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*மிகநீண்டகாலமாககணவன்,மனைவிஎனகுடும்பமாக இணைந்து போதைப்பொருள் விற்பனையில் இருவரும் ஈடுபட்டு வந்துள்ளானர்.*

*இந்நிலையில், அண்மையில் கணவன்போதைப்பொருள் விற்பனை குற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவரதுமனைவியும் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தநிலையில் இன்றையதினம்கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*இளைஞர் சமூகத்தை சீர் கெடுக்கும் இவ்வாறான போதைப்பொருள் வியாபாரிகளுக்கு தகுந்ததண்டனைவழங்கப்பட வேண்டும்எனஇளைஞர்கள் கிளர்ந்தெழுந்தனர்.*

*பிறைந்துறைச்சேனை - சிவில்இளைஞர்அமைப்பு ஓட்டமாவடி சுற்றுவட்டத்தில்ஏற்பாடு செய்தஇவ்பேரணியில் பெருந்திரளான மக்கள்கலந்துகொண்டனர். (ஐ)*

# துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மீட்பு!

மித்தெனிய, ஜூன் 25

மித்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொரகொலயா பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இறந்த இருவரும் 30 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று இரவு மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தி தப்பிச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை.

# மலையகத் தமிழரையும் கைவிடாதீர்கள்!

## ஐ.நா. மஆணையாளரிடம் மனோ வலியுறுத்து





கொழும்பு, ஜூன் 25

"ஐ.நா. சபையும், அதற்குள் வரும் மனித உரிமை ஆணையமும், இலங்கையில் வாழும் ஈழத்தமிழ் மக்களைக் கைவிட்டு விட்டது. கொடும் யுத்தம் நடந்தபோது ஐநா சபை வடக்கில் இருந்து முன்னறிவித்தல் இல்லாமல் வெளியேறி, அங்கே சாட்சியம் இல்லாத யுத்தம் நடக்க காரணமாக அமைந்து விட்டது. இன்று யுத்தம் முடிந்து 15 வருடங்கள் ஆகியும், கொலையானோர், காணாமல்போனோர் தொடர்பில் பொறுப்புக்கூறல் நடை பெறவில்லை. அரசியல் கைதிகள் பிரச்சினை முழுமையாக முடிவுக்கு வரவில்லை. யுத்தம்நடைபெற மூல காரணமாக அமைந்துள்ள இனப்பிரச்சினை தீர்வுக்கு வரவில்லை. ஆகவேதான், ஈழத்தமிழ் உடன் பிறப்புகள் ஐநா சபை தங்களை கைவிட்டு விட்டதாக நினைக்கின்றார்கள். ஈழத்தமிழ் மக்களை கைவிட்டதை போன்று, இந்நாட்டில் வாழும் மலையகத் தமிழ் மக்களையும் கைவிட்டு விட வேண்டாம் என உங்களைக் கோருகின்றேன்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கிடம் நேரடியாக தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க்கிற்கும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம். பி. மேலும் கூறியதாவது:-

"இலங்கையில் மக்கள் மத்தியில் மிகவும் பின் தங்கிய பிரிவினராக வாழ்கின்றார்கள். காணி உரிமை, வீட்டு உரிமை, வறுமை, சிசு மரணம், சுகாதாரம். தொழில் நிலைமைகள் என்ற எதுவாக இருந்தாலும், அவை அனைத்திலும் மிகவும் குறை வளர்ச்சி கொண்ட மக்களாக இலங்கையில் வாழும் சமீபத்திய இந்திய வம்சாவளி மலையக மக்கள் குறிப்பாக, பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் இருக்கின்றார்கள். சில வருடங்களுக்கு முன் இலங்கை வந்த ஐ.நா. விசேட அறிக்கையாளர் டொமொயா ஒபொகடா, தனது அறிக்கையில் பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் காத்திரமாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையை அவர் உங்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் 51 ஆவது அவைக்குச் சமர்ப்பித்தார். அதை கவனத்தில் கொள்ளுமாறு உங்களைக் கோருகின்றேன்.

இலங்கையைப் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்போது, தவறாமல் இலங்கையின் வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் மலையக மக்கள் குறிப்பாக, பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் படி, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் என்ற முறையில் நான் உங்களை மேலும் கோருகின் றேன்.

இலங்கையில் வாழும் மலையக மக்கள் இன்னமும் முழுமையான குடி மக்களாக இந்நாட்டில் வாழ வில்லை. இரண்டாம் தர பிரஜைகளாகவே வாழ்கின்றார்கள். காணி உரிமை உட்பட உரிமைகள் உரித்தாகும் போதுதான், அவர்களது குடி உரிமை முழுமை அடையும். அதை ஐநா சபையும், அதற்குள் வரும் மனித உரிமை ஆணையமும் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்." - என்றார்.


# இந்திய வரலாற்றின் இருண்ட காலம்

எமர்ஜென்சி காலத்தில் காங்கிரஸ் அரசு ஜனநாயகத்தை கைது செய்தது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து, சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்திய வரலாற்றின் இருண்ட அத்தியாயமான அவசர நிலை (எமர்ஜென்சி) பிரகடனப்படுத்தி, 50 ஆண்டுகள் நிறைவு பெற்றது. அந்நேரத்தில் இந்திய ஜனநாயகத்தையே காங்கிரஸ் அரசு கைது செய்தது போல் இருந்தது.

அவசர காலத்தின் இருண்ட நாட்களால் பாதிக்கபட்டவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர வேண்டும். அப்போது தான், 1975-1977ம் ஆண்டு வரை இடையிலான அவமானகரமான காலம் குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படும். நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்ட போது நான் ஆர்.எஸ்.எஸ்-இல் இருந்தேன்.

ஜனநாயக கட்டமைப்பை பாதுகாக்கும் முக்கியத்துவத்தை அவசர நிலை உறுதிப்படுத்தியது. இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.(ஐ)






# ரயில் பயண கட்டணத்தை உயர்த்த கூடாது: பிரதமர் மோடிக்கு ஸ்டாலின் கோரிக்கை

ரயில் பயண கட்டணத்தை உயர்த்த கூடாது என ரயிலில் சென்ற புகைப்படத்தை சமூக வலைதளத்தில் பகிர்ந்து பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை: இந்திய ரயில்வே என்பது ஏழை, நடுத்தர மக்களின் பயணங்களுக்கானது மட்டுமல்ல் அது, அவர்களது அன்றாட வாழ்வில் ஓர் அங்கம்! இன்று காட்பாடி செல்ல ரயில் நிலையம் வந்தபோது, என்னை அன்போடு வரவேற்ற மக்களிடம் பேசினேன்.

ஆங்கிலேயர் காலத்து ஸ்டேஷனை சீரமைக்க எதிர்பார்ப்பு: மேம்பாட்டு பணி நடைபெறுமா என பயணிகள்

வழக்கமான உற்சாகமும் மகிழ்ச்சியும் குறைந்திருந்தது. ஜூலை முதல் உயர்த்தப்படவுள்ள ரயில் கட்டணங்களும், குறைந்து வரும் சாதாரண வகுப்புப் பெட்டிகளும் அவர்களது மகிழ்ச்சியைக் களவாடியுள்ளது.

பிரதமர் மோடி மற்றும் மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை மக்கள் சார்பாக நான் நான் கேட்டுக்கொள்வது, ஏ.சி., பெட்டிகளை உயர்த்த வேண்டும் எனச் சாதாரண வகுப்புப் பெட்டிகளைக் குறைக்க வேண்டாம். ரயில் கட்டணங்களையும் உயர்த்த வேண்டாம்.

ஏற்கெனவே விலைவாசி உயர்வு முதல் சிலிண்டர் விலை உயர்வு வரை நம் நடுத்தரக் குடும்பங்கள் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது கவலையை மேலும் அதிகரித்திட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய ரயில்வே வெறும் சேவை மட்டுமல்ல. அது ஒரு குடும்பம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். (ஐ)

# வி.சி.க. 234 தொகுதிகளுக்கு தகுதியானது–திருமாவளவன்



"நாங்கள், 234 தொகுதிகளுக்கு இணையானவர்கள், தகுதியானவர்கள். எங்களை வெறும் டீ, பன் கொடுத்து ஏமாற்றிவிடலாம் என்று நீங்கள் கணக்கு போடாதீர்கள்" என விடுதலை சிறுத்தைக் கட்சி தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் திருமாவளவன் பேசியதாவது: வெறும் ஜாதி அரசியலையும், மத அரசியலையும், ஜாதி பெருமிதங்களையும், மத பெருமிதங்களையும் அரசியலாக இங்கு மக்கள் மத்தியில் அள்ளி இறைத்து கொண்டு இருப்பவர்கள் மத்தியில், இடதுசாரி பார்வை கொண்ட கருத்தியல், இந்த மண்ணுக்கு தேவை. தேசிய அளவில் அது வலிமை பெற வேண்டும். அதற்கு தேசிய பார்வையும் தேவை என்கிற அடிப்படையில் இயங்கும் இயக்கம் தான் விடுதலை சிறுத்தை கட்சி.

அதனால் தான் எல்லோரும் தேர்தல் கணக்கு போடுகிற போது, நாம் தேசத்தின் பாதுகாப்பை பற்றி, கவலைப்பட்டு கொண்டு இருக்கிறோம். பேரணி நடத்தி கொண்டு இருக்கிறோம். எத்தனை இடங்களில் நீங்கள் போட்டியிட போகிறீர்கள் என்று திரும்ப, திரும்ப கேள்வி கேட்கிறார்கள். பாவம் அவர்களுக்கு இன்னும் சிறுத்தைகளை மதிப்பிட தெரியவில்லை. திருமாவளவனை மதிப்பிட செய்ய முடியவில்லை என்பது தான் என்னுடைய பார்வை.

அவர்கள் சராசரி இயக்கவாதிகளை போல் நம்மை பார்க்கிறார்கள். அதனால் தான் இந்த கேள்விகளை கேட்கிறார்கள் என்று நான் எண்ணி கொள்கிறேன். தற்காலிகமான பயன்களுக்காக, இயக்கம் நடத்துபவர்களோடு நம்மை ஒப்பிட்டு செய்து பார்க்கிறார்கள் என்று அவர்களின் கேள்விகளை நான் பரிதாபத்தோடு தான் பார்க்கிறேன்.

தோழர்கள், அவற்றை எல்லாம் நாம் கடந்தவர்கள், அது அவர்களுக்கு புரியாது. இதை புரிந்து கொள்வதற்கே, அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் நம்மை படிக்க வேண்டும்.

ஏதோ திருநீற்றை அழித்துவிட்டான் திருமாவளவன் என்று அரசியல் பேசுகிறார்கள். எப்படியாவது எங்களை பற்றி பேசி கொண்டே இருங்கள். எதிராகவோ, ஆதரவாகவோ எங்களை பற்றி பேசிக் கொண்டே இருங்கள். ஏனென்றால் நாங்கள் தேசத்தை திருப்பி அமைப்பதற்காக, புதுப்பித்து கட்டமைப்பதற்காக, புதிய இந்தியாவை உருவாக்குவதற்காக, அம்பேத்கரின் கனவை நனவாக்குவதற்காக போராடி கொண்டு இருப்பவர்கள். எங்களை வெறும் டீ, பன் கொடுத்து ஏமாற்றிவிடலாம் என்று நீங்கள் கணக்கு போடாதீர்கள்.

நாங்கள் 6 சீட் கொடுத்தோம். 8 சீட் கொடுத்தோம். அதற்கு மேல், அவர்களை நாங்கள் ஊக்கப்படுத்தவில்லை. நாங்கள் 10 சீட்டுக்கு மேல் இவர்களுக்கு எப்போதுமே தரமாட்டோம். அது உங்கள் மதிப்பீடு.

எங்களை பொறுத்தவரை நாங்கள், 234 தொகுதிகளுக்கு இணையானவர்கள், தகுதியானவர்கள். அந்த வலிமை எங்களுக்கு உண்டு.

இதை நான் ஆணவத்தில் சொல்லவில்லை. வெறும் தேர்தல் கணக்கில் சொல்லவில்லை. சமூக மாற்றத்தின் பார்வை அடிப்படையில் சொல்கிறேன். இவ்வாறு அவர் பேசினார். (ஐ)

# பதவிக்காக சமூக நீதியை பலி கொடுக்கும் தி.மு.க. அரசு: அன்புமணி விளாசல்



தமிழகத்தை ஆட்சி செய்பவர்கள் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக சமூக நீதியை பலி கொடுப்பவர்கள் என்று பா.ம.க., தலைவர் அன்புமணி விமர்சித்துள்ளார்.

சமூகநீதிக்கான பெருந்தலைவர் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் 95ம் பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது. இந்தியா விடுதலை அடைந்த நாளில் இருந்து பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மறுக்கப்பட்டு வந்த இட ஒதுக்கீட்டை ஆதிக்க சக்திகளின் எதிர்ப்புகளையும் மீறி செயல்படுத்தியதற்காக நாமும், நமது பல தலைமுறையினரும் அவருக்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறோம்.

வழக்கமான ஆட்சியாளர்களுக்கும், வி.பி. சிங் அவர்களுக்கும் இடையிலான வேறுபாடு இமயத்தை விட பெரிதானது. சுருக்கமாகக் கூற வேண்டுமானால், தமிழகத்தை ஆட்சி செய்பவர்கள் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக சமூக நீதியை பலி கொடுப்பவர்கள் ஆனால், வி.பி. சிங்கோ சமூகநீதியைக் காப்பதற்காக ஆட்சியைப் பலி கொடுத்தவர். அதனால் தான் அவரது தியாகம் மிகப்பெரியது ஆகும்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களின் மக்கள்தொகை அடிப்படையில், மக்கள்தொகைக்கு இணையான அளவில் இடப்பங்கீடு வழங்க வேண்டும் என்பதே அவரது விருப்பம். தேசிய அளவில் அது சாத்தியமாவதற்கு மத்திய அரசு விரைவில் நடத்தவிருக்கும் சாதிவாரி கணக்கெடுப்பு வகை செய்யக்கூடும்.

ஆனால், தமிழக ஆட்சியாளர்களுக்கு அது குறித்த பார்வையே இல்லாததால் அதற்கான வாய்ப்புகளே தென்படவில்லை. சமூகநீதி நாயகன் வி.பி.சிங் பிறந்தநாளில் அவரது ஆன்மா தமிழக ஆட்சியாளர்களின் சமூகநீதிக் கண்களை திறக்க வகை செய்யட்டும். இவ்வாறு அவர் கூறி உள்ளார். (ஐ)




# பெண்ணுலகம்!



பெண்ணின் வாழ்வில் எந்தப் பருவம் இனிமையானது என்று ஆராய்ந்தால் சொல்லிக்கொள்வதற்கான ஒருசில பக்கங்கள்கூட இல்லை என்பதே யதார்த்தம். ஒவ்வொரு நாளும் பெற்றோரின் சொல்படி நடந்து, கணவனின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து, பிள்ளைகளின் விருப்பத்திற்கு ஏற்ப வாழ்ந்து, இச்சமூகத்தின் ஒட்டுமொத்த விருப்பு வெறுப்புகளையும் அவளின் மீது திணித்து வைக்கும் அமைப்பாகத்தானே இன்றைய வாழ்க்கைமுறை அவளுக்கு வாய்த்திருக்கிறது!

பெண்ணின் அதிகபட்ச ஆசை என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பார்க்கிறேன். முதலில் அம்மாவின் சொல்படி கேக்க வேண்டும், அவர்கள் விருப்பப்படியே படிக்க வேண்டும், கைநீட்டிய ஆடவனை விருப்பமின்றியே திருமணம் செய்துகொள்ள வேண்டும், அப்புறம் தனக்கான கணவனைத் தக்க வைத்துக் கொள்வதற்கான சாமர்த்தியத்தை அவள் மாண்டு மடியும்வரை கடைப்பிடிக்க வேண்டும். பின் எல்லாவற்றின் சாட்சியமாக ஒரு குழந்தை, அதுவும் ஆண் வாரிசைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இப்போதைய தலைமுறைக்கு இது கடந்தகாலத்தின் நிழலாகத் தெரிந்தாலும் எனது தலைமுறையின் நிஜம் இதுதானே?

ஒரு பெண் இதைத் தவிர்த்து வேறு எதைச் சிந்தித்தாலும் அவள் தவறான நடத்தையுடையவள் என்று பட்டம் கொடுப்பதுதான் இங்கு வழக்கம். இன்றைய சூழலில் அப்படியெல்லாம் எதுவும் இல்லை, பெண்கள் இப்போது எப்படியெல்லாம் நவீனமாக இருக்கிறார்கள் என்று பிதற்றிக் கொள்ளலாம். ஆனால், உண்மையோ அதற்குப் புறம்பானது. இது ஒரு சில பெண்களுக்கு மட்டும் வேண்டுமானால் பொருந்துமே தவிர மற்றபடி எல்லாருமே இன்றளவும் பலவகையில் நசுக்கப்பட்டுதானே இருக்கின்றனர்.

நிஜத்தில் தனக்காகவென்று எந்தப் பெண்ணும் யோசிப்பதே இல்லையே, அப்படியே யோசித்தாலும் அதுவும் முழுக்க அவளது குடும்பத்தைச் சார்ந்ததாகவே இருக்கிறது. அவளுக்கென்று அவள் எதையுமே செய்துகொள்வதில்லை. ஆனாலும் இந்தச் சமூகம், “இதிலென்ன தவறு இருக்கிறது, பெண்ணென்பவள் எப்போதுமே வீட்டுக்கான ஒழுக்கக் கட்டுப்பாடோடுதான் இருக்க வேண்டும்” என்கிற பஞ்சாங்கம் வேறு.

காதல் என்றால் என்ன ஒருவர் எப்படியிருக்கிறாரோ அவரவர் நிலையிலேயே ஒருவர் ஏற்றுக்கொள்வதுதானே? இன்னும் கூடுதலாக நம்மோடு பயணித்து அடுத்த நிலைக்கு நம்மைக் கடத்திச் செல்வது. ஆனால், ‘எனக்கு வலிச்சா உனக்கு வலிக்கணும், எனக்கு காய்ச்சல் வந்தா உன்னோட உடலும் கொதிக்கணும், எனக்குக் பசிச்சா உனக்கும் பசிக்கணும்’ என்று இதுபோன்ற விஷயங்களையெல்லாம் பற்றிக் கேள்விப்படும்போது இதை, காதலா கட்டுப்பாடா என்று எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது?

தன் கணவனுக்காக, குழந்தைகளுக்காக, தன் குடும்பத்திற்காக என்று சிந்தித்து, தனக்கென ஒரு காசுகூடச் சேர்த்து வைக்காமல் எல்லாவற்றையும் இழந்து, அவர்களுக்காக மட்டும் வெளிச்சம் வீசி உருகும் மெழுகாகி, மற்றவர்களுக்காகத் தன் உடல் நலத்தைக்கூடக் கவனிக்காமல் விட்டுவிட்டு, நிமிரக்கூடாத கூனியாகிவிடும் எத்தனையோ பெண்களை இன்றும் கண்முன்னநே பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். வயோதீக நாளில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக்கூட வழி இல்லாமல் நடுவீதிக்கு தள்ளப்படுகின்றனர். வாழும்போதே நமக்காகவும் கொஞ்சம் வாழ்வோம், நம் உடல் நலனையும் கருத்தில் கொள்வோம். குடும்பத்தையும் தாண்டி ஓர் உலகம் இருக்கிறது என்று உணரும் பெண்கள் மட்டும்தானே வாழ்வில் உலகை ஜெயித்துக் கொண்டிருக்கிறார்கள்.

# வரலாறு காணாத பருவமழை வீடுகளை இழந்த 80,000 பேர்



சீனாவில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளத்தில் சிக்கி 80,000 பேர் பாதிக்கப்பட்டு இருப்பிடங்களை இழந்துள்ளனர்.


சீனாவில் வரலாறு காணாத அளவுக்கு பருவமழை பெய்து வருகிறது. தொடர் மழையால் அந்நாட்டின் ஹூனான், ஹூபே மாகாணங்கள் கடும் பாதிப்பை சந்தித்து வருகின்றன.

தெற்கு சீனாவில் உள்ள குய்சூ மாகாணம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. மழையால் ஏற்பட்ட வெள்ளம் குடியிருப்புகளை சூழ்ந்துள்ளதால் மக்கள் கடும் தவிப்புக்கு ஆளாகி இருக்கின்றனர். கிட்டத்தட்ட 80,000 மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

கோன்ஜியங், ரோன்ஜியங் நகரங்கள் வெள்ளத்தில் சிக்கி உள்ளன. அங்கு பாயும் ஆறுகளின் நீர்மட்டம் வெகு வேகமாக உயர்ந்து வருகிறது.

எனவே, தாழ்வான பகுதிகளில வசிக்கும் ஏராளமான மக்கள் உடனடியாக வெளியேறுமாறு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டு இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களை பத்திரமாக மீட்கும் பணிகளும் முழு வீச்சில் நடந்து வருகின்றன. (ஐ)

## ஈரானின் அணுசக்தி திட்டத்தை இஸ்ரேல் அழித்தது



"ஈரானின் அணுசக்தி திட்டத்தை இஸ்ரேல் அழித்தது" என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

இஸ்ரேல்-ஈரான் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் அமலாகி உள்ளது. இது தொடர்பாக, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியதாவது: ஈரானிடம் ஒருபோதும் அணு ஆயுதம் இருக்காது. ஈரானின் அணுசக்தி திட்டத்தை இஸ்ரேல் அழித்தது. ஈரானுக்கு எதிரான போரில் அணுசக்தி திட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டது. ஆட்டம் இன்னும் முடியவில்லை அணுசக்தி திட்டங்கள் தொடரும்: ஈரான் திட்டவட்டம்

நடான்ஸ் மற்றும் இஸ்பஹானில் உள்ள அணுசக்தி நிலையங்களில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. ஈரானின் அணுசக்தி திட்டத்தை நாங்கள் முறியடித்துவிட்டோம். ஈரானில் யாராவது அதை மீண்டும் கொண்டு வர முயற்சித்தால், எந்தவொரு முயற்சியையும் முறியடிக்க அதே உறுதியுடன், அதே தீவிரத்துடன் செயல்படுவோம்.

ஈரானின் அணுசக்தி திட்டம் மற்றும் ஏவுகணைகளால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் முறியடிக்கப்பட்டு உள்ளது. ஆபரேஷன் ரைசிங் லயன் என்று பெயரிடப்பட்ட ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல், வரலாற்றில் பதிவு செய்யப்படும். உலகம் முழுவதும் உள்ள படைகளால் ஆய்வு செய்யப்படும். இவ்வாறு நெதன்யாகு கூறினார். (ஐ)




## செக் குடியரசு ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா முதலிடம்

செக்குடியரசில், 'ஆஸ்ட்ராவா கோல்டன் ஸ்பைக்' சர்வதேச தடகள போட்டி நடந்தது. இந்தியா சார்பில் ஒலிம்பிக் ஈட்டி எறிதலில் இரு பதக்கம் (2021ல் தங்கம், 2024ல் வெள்ளி) வென்ற நீரஜ் சோப்ரா 27, பங்கேற்றார்.

சமீபத்தில் நடந்த பாரிஸ், டைமண்ட் லீக் தடகளத்தில் நீரஜ் சோப்ரா (88.16) முதலிடம் பிடித்து, பட்டம் வென்றார். இதனால் மீண்டும் இவர் மீது எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

இம்முறை முதல் வாய்ப்பில் 'பவுல்' செய்த நீரஜ் சோப்ரா, அடுத்து 83.45 மீ., துாரம் எறிந்தார். 3வது வாய்ப்பில் அதிகபட்சம் 85.29 மீ., துாரம் எறிந்தார்.

4, 5வது வாய்ப்பில் (82.17, 81.01) ஏமாற்றிய இவர், கடைசி வாய்ப்பை பவுல் செய்தார். இருப்பினும் நீரஜ் சோப்ரா முதலிடம் (85.29 மீ.,) பிடித்தார். தென் ஆப்ரிக்காவின் தவ் ஸ்மித் (84.12 மீ.,), கிரனடாவின் ஆண்டர்சன் பீட்டர்ஸ் (83.63 மீ.,) இரண்டு, மூன்றாவது இடம் பிடித்தனர். (ஐ)

# ஆட்டம் இன்னும் முடியவில்லை அணுசக்தி திட்டங்கள் தொடரும்: ஈரான் திட்டவட்டம்

ஈரான் அணுசக்தி திட்டங்களை குறி வைத்தே, அதன் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தாக்குதல் நடத்தின. தற்போது போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட நிலையில், 'எங்களுடைய அணுசக்தி திட்டங்கள் தொடரும்' என, ஈரான் கூறியுள்ளது.

ஈரான் உடனான அணுசக்தி தொடர்பான அமெரிக்காவின் பேச்சு தோல்வியில் முடிந்தது. மறுபக்கம் 'ஈரான் அணுசக்தியை அணு ஆயுதம் தயாரிக்க திட்டமிட்டுள்ளது் அது எங்களை குறிவைக்கும்' என்று, இஸ்ரேல் கூறியது.

இதையடுத்தே, ஈரான் மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. அதில் அமெரிக்காவும் இணைந்தது.

ஈரானின் மூன்று முக்கிய அணுசக்தி மையங்களான போர்டோ, நடான்ஸ், இஸ்பஹான் ஆகியவை தாக்கப்பட்டதாக அமெரிக்காவும், இஸ்ரேலும் கூறுகின்றன.

ஆனால், இந்த தாக்குதல்களுக்கு முன்பாகவே, 400 கிலோ செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை பாதுகாப்பான இடத்துக்கு ஈரான் மாற்றியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரானின் அணுசக்தி அமைப்பின் தலைவர் முகமது இஸ்லாமி, இது தொடர்பாக ஒரு அறிக்கை வெளியிட 'ஆட்டம் இன்னும் முடியவில்லை.

இதுபோன்று தாக்குதல்கள் நடந்தால் எப்படி யுரேனியத்தை பாதுகாக்க வேண்டும் என்பதற்கு ஏற்கனவே திட்டங்கள் வகுத்து வைத்திருந்தோம்'என்று கூறியுள்ளார்.

அணுசக்தி மையங்கள் தாக்கப்பட்டால், மீண்டும் உற்பத்தியை துவங்குவது தொடர்பாக விரிவான திட்டங்கள் தங்களிடம் உள்ளதாக அவர் கூறி உள்ளார்.

இதன் வாயிலாக, யுரேனியம் செறிவூட்டல் பணிகள் எந்தத் தடையும் இல்லாமல் தொடர்வதற்கு எப்போதும் தயாராகவே இருந்தோம் என்று அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

தற்போதைக்கு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டாலும், யுரேனியத்தை செறிவூட்டுவது, அணுசக்தி திட்டங்கள் எப்போதும்போல் தொடர்ந்து நடக்கும் என்று அவர் கூறியுள்ளார்.



## உங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரவேற்று, கவனவீர்ப்பு நடவடிக்கையைத் திருகோணமலை கல்லூரி வீதியில் அமைந்துள்ள யுபிலி மண்டபத்துக்கு முன்னால் பாதிக்கப்பட்ட மக்கள் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது பாதிப்புகளை பாதாகைகளில் படங்களின் மூலமாகவும் வாசகங்கள் மூலமும் காட்சிப்படுத்தியவாறு அமைதியான முறையில் கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். இதனைக் கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்கள், வடக்கு - கிழக்கு சமூக இயக்கம், சிவில் அமைப்புக்கள் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது அந்த இடத்துக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கிடம் பாதிக்கப்பட்ட தரப்பினர் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் வழங்கி அவருடன் உரையாடியிருந்தார்கள்.

இதன்பின்னர் கவனவீர்ப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் தாங்கியிருந்த பதாதைகளை அவர்களிடத்தில் சென்று ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் பார்வையிட்டதுடன் தனது அன்பையும் வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கை அரசுடன் இணைந்து உங்களது பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்குவதற்கு நாம் முழுமையான முயற்சிகளை எடுப்போம் என்று இதன்போது ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் தெரிவித்திருந்தார்.

## சந்திரசேகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திரசேகர் அஞ்சலி செலுத்திய நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களின் எதிர்ப்பால் அங்கிருந்து வெளியேறினார்.

பல்வேறு சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் உட்பட பல்வேறு தரப்புகளும் அஞ்சலி செலுத்திய நிலையில் இன்று பிற்பகல் 1.15 மணியளவில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் சுந்தரமூர்த்தி கபிலன் உட்படப் பலர் 'அணையா விளக்கு' போராட்டக் களத்துக்குச் சென்று அமைச்சர் சந்திரசேகருடன் சேர்ந்து அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது அமைச்சர் உள்ளிட்டவர்களை வெளியேறுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சலிட்டனர். இதனால் குழப்பகரமான நிலை இடம்பெற்றது. அமைச்சர் பாதுகாப்பான முறையில் வெளியேற்றப்பட்ட நிலையில் அமைச்சரின் வாகனங்களுக்குக் கல்வீச்சு, தண்ணீர்ப் போத்தல் வீச்சு என்பனவும் இடம்பெற்றன.

## அணையா விளக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று பிற்பகல் யாழ்ப்பாணமத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் பார்வையிட்ட பின்னர் அதற்கு அருகில் இடம்பெறும் 'அணையா விளக்கு' போராட்டக் களத்துக்குச் சென்று மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது மக்கள் செயல் அமைப்பினரால் 'அணையா விளக்கு' போராட்டத்தின் கோரிக்கைகள் தொடர்பான மகஜர் ஒன்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது.

# மட்டக்களப்பில் இளைஞர் ஒருவர் கொடூரக் கொலை

மட்டக்களப்பு, ஜூன் 25

மட்டக்களப்பு, கரடியனாறு பிரதேசத்தில் உள்ள வயல் ஒன்றில் கோடரியால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு - குசலானமலை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய வீரையா விஜயகாந் என்ற இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு கொலை செய்யப்பட்ட இளைஞருக்கும் உறவினர் ஒருவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின் போது சந்தேகநபரான உறவினர், சம்பவ இடத்தில் இருந்த இளைஞரின் தாயைத் தாக்கி காயப்படுத்திவிட்டு பின்னர் இளைஞரை கோடரியால் தாக்கிக் கொலை செய்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச்சென்ற சந்தேகநபரைக் கைது செய்வது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விளக்கு' போராட்டம் இன்று புதன்கிழமை மூன்றாவது நாளாகத் தொடர் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்நிலையில் மதியம் போராட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற சிவஞானத்தை அங்கிருந்த மக்கள் வெளியேறுமாறு கோஷங்களை எழுப்பி போராட்ட களத்தில் இருந்து வெளியேற்றி இருந்தனர்

யாழ்ப்பாணத்தில் பலர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனப் பகிரங்கமாகக் குற்றச்சாட்டப்பட்டு வரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருடன் கூட்டுச் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைத்துள்ளதாகவும், அவ்வாறானவர்களுடன் கூட்டுச் சேர்ந்தவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளத் தகுதியற்றவர்கள் எனவும் கூறியே போராட்டக் களத்தில் இருந்து சிவஞானத்தை அப்புறப்படுத்தியதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

# ஹொரணை – கொழும்பு தனியார் பேருந்துகள் சேவையிலிருந்து விலகல்




கொழும்பு, ஜூன் 25

மில்லேவவிலிருந்து ஹொரணை வழியாக கொழும்புக்கு புதிய பேருந்து சேவையை செயல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஹொரணை-கொழும்பு வழித்தட எண் 120இல் இயக்கப்படும் தனியார் பேருந்துகள் இன்று புதன்கிழமை சேவையிலிருந்து விலக முடிவு செய்துள்ளன.

தற்போதுள்ள பேருந்து ஓட்டுநர்களுடன் முறையான ஆலோசனை இல்லாமல் வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவரால் புதிய சேவை அறிமுகப்படுத்தப்பட்டதாக ஹொரணை-கொழும்பு தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் குற்றம் சாட்டியது.

ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு எட்டப்படாவிட்டால், எதிர்வரும் நாட்களில் பிற வழித்தடங்களில் உள்ள தனியார் பேருந்து ஓட்டுநர்களும் போராட்டத்தில் சேரக்கூடும் என்று சங்கத் தலைவர் ஜனக குணசிறி எச்சரித்தார்.

இந்த இடையூறுக்கு பதிலளிக்கும் விதமாக, சிக்கித் தவிக்கும் பயணிகளுக்கு இடமளிக்க இலங்கை போக்குவரத்து சபை (SLTB) பேருந்துகளை நிறுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கிடையில், ஹொரணை-கொழும்பு வழித்தடத்தில் நேரக் கணக்காணிப்பாளர்களின் நடத்தை குறித்தும் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

அவர்கள் தங்கள் கடமைகளை முறையாகச் செய்யவில்லை என்றும் நியாயமற்ற நிதி நடைமுறைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் கூறினர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு இந்தப் பிரச்சினைக்கு நியாயமான மற்றும் நீடித்த தீர்வை வழங்குமாறு சங்கம் வலியுறுத்தியது.

# நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்!

இரண்டு மாதங்களுக்கு தேவையான எரிபொருளை பெறுவதற்கான திட்டம் ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளதால் நாட்டினுள் எந்தவொரு எரிபொருள் தட்டுப்பாடும் ஏற்படாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

எந்த பிரச்சனையும் இல்லாமல் அடுத்த இரண்டு மாதங்களுக்கு தேவையான எரிபொருளை பெறுவதற்கு நாங்கள் ஏற்கனவே முன்பதிவுகள் செய்துள்ளோம். அந்த முன்பதிவுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இதனால் அடுத்த இரண்டு மாதங்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. பிரச்சனை என்னவென்றால், எரிபொருள் எந்த இடங்களிலிருந்து வருகிறது என்பதுதான். அதற்கு பிறகு, போரின் தாக்கம் இருக்கிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும் என்றார். எங்களிடம் உள்ள அறிக்கைகளின்படி, ஒக்டேன் 92 பெற்றோல் பெருமளவு இறக்குமதி செய்யப்படுவது போர் நடக்கும் பிராந்தியத்திலிருந்து அல்ல. அந்த எரிபொருள் மலேசியா, சிங்கப்பூர், இந்தியாவில் இருந்து வருகிறது.

ஒரே ஒரு இறக்குமதி ஓமானிலிருந்து செய்யப்பட்டது. அதுவும் ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டாலும் எங்களுக்கு பிரச்சனை இல்லை. நாங்கள் அந்த விநியோகஸ்தர்களிடம் கலந்துரையாடி எரிபொருள் கிடைக்கப்பெறுவதை முழுமையாக உறுதி செய்துள்ளோம். இதனால் எந்த பிரச்சினையும் இல்லை- என்று தெரிவித்தார்.

மேலும் தற்போதைய நிலைமையில் சட்டவிரோதமாக எரிபொருளை பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என டி.ஜே. ராஜகருணா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுயேச்சைச் குழுவினரின் ஆதரவுடன் நாவிதன்வெளி சபை தமிழரசு வசம்!

## தவிசாளராக ரூபசாந்தன் தெரிவு





அம்பாறை, ஜூன் 25

அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக் கூட்டம் இன்று காலை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஎஸ்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

அதன்போது தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இ.ரூபசாந்தனும், உப தவிசாளராக வண்டில் சின்ன சுயேச்சைக் குழுவின் தலைவர் கு.புவனரூபனும் தெரிவு செய்யப்பட்டார்கள் .

பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற தெரிவுக் கூட்டத்தில்

தவிசாளர் தெரிவுக்கு அழைத்தபோது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் இ.ரூபசாந்தனும், தேசிய மக்கள் சக்தி சார்பில் எஸ்.நிரோஷனும் போட்டியிட்டார்கள்.

ரூபசாந்தன் 8 வாக்குகளும், நிரோஷன் 5 வாக்குகளும் பெற்றனர். அதற்கமைய ரூபசாந்தன் தவிசாளரானார்.

உப தவிசாளர் தெரிவில் சுயேச்சை சார்பில் நஸீரும், வண்டில் சின்னச் சுயேச்சைக் குழு சார்பில் புவனரூபனும் போட்டியிட்டனர் . அங்கும் எட்டுக்கு ஐந்து என்ற அடிப்படையில் வண்டில் சின்ன சுயேச்சைக் குழுத் தலைவர் புவனரூபன் உப தவிசாளரானார்.

சபையில் 13 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாவிதன்வெளி பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க அங்கு போட்டியிட்ட வண்டில் சின்ன சுயச்சைக் குழு இணக்கம் தெரிவித்திருந்தது.

# காரைதீவு பிரதேச சபை தமிழரசு வசம்






அம்பாறை, ஜூன் 25

அம்பாறை மாவட்டம், காரைதீவு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சுப்பிரமணியம் பாஸ்கரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதன்படி காரைதீவு பிரதேச சபையின் 4 ஆவது தேர்தலில் 5 ஆவது தவிசாளராக சு.பாஸ்கரன் 8 வாக்குகளைப் பெற்று தெரிவாகியுள்ளார்.

உப தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூத்த உறுப்பினர் ஏ.எச்.எம்.இஸ்மாயில் பகிரங்க வாக்களிப்பின் மூலம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் தெரிவுக் கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச சபைக்காக நடைபெற்ற 4 ஆவது தேர்தலின் மூலம் தெரிவான 11 உறுப்பினர்களிடையே இந்தத்தெரிவு நடைபெற்றது.

தவிசாளர் தெரிவுக்காக இரகசிய வாக்கெடுப்பா? பகிரங்க வாக்கெடுப்பா? என்ற விவாதத்தில் சுமார் அரைமணி நேரம் சென்றது.

தவிசாளரின் பெயரை முன்மொழியுமாறு ஆணையாளர் அஸ்மி கேட்டுக்கொண்டார்.

அங்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சு.பாஸ்கரனின் பெயரை தமிழரசு உறுப்பினர் கே.ஜெயசிறில் முன்மொழிய மு.கா. உறுப்பினர் இஸ்மாயில் வழிமொழிந்தார்.

மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் திருமதி கிருஷ்ணபிள்ளை செல்வராணியை தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் அபூபக்கர் பர்ஹாம் முன்மொழிய தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் சுலஸ்தனா வழிமொழிந்தார்.

தவிசாளர் தெரிவை பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடத்துவது எனச் சபையில் உள்ள 8 உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்ததற்கமைவாக பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பின்போது பாஸ்கரன் 8 வாக்குகளைப் பெற்றுக்கொண்தாரா. செல்வராணி 2 வாக்குகளைப் பெற்றார். பர்ஹாம் நடுநிலை வகித்தார்.

அதன்படி காரைதீவு பிரதே சபையை 4 ஆவது தடவையாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்று தவிசாளர் பதவியைத் தக்கவைத்துக்கொண்டது.

அடுத்து உப தவிசாளர் தெரிவு புதிய தவிசாளரின் அனுமதியுடன் ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

உப தவிசாளர் பதவிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூத்த உறுப்பினர் எம்.எச்.எம்.இஸ்மாயிலின் பெயர் முன்மொழியப்பட்டது. வேறு பெயர் முன்மொழியப்படாமையினால் இஸ்மாயீல் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

# முசலி பிரதேச சபை ஆட்சி என்.பி.பி. வசம்





மன்னார், ஜூன் 25

மன்னார் மாவட்டம், முசலி பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தைத் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

முசலி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி பாபு தலைமையில் முசலி பிரதேச சபையில் நடைபெற்றது. இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கியாதியன் சாயூ நலீம் மற்றும் தொழிலாளர் கட்சி உறுப்பினர் முகமது காமில் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதையடுத்துச் சபையில் உள்ள 16 உறுப்பினர்களும் கலந்துகொண்டு பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.

இதன்போது தொழிலாளர் கட்சி உறுப்பினர் முகமது காமில் 7 வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கியாதியன் சாயு நலீம் 9 வாக்குகளையும் பெற்றனர். அதிகூடிய வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கியாதியன் சாயு நலீம் முசலி பிரதேச சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, சுயேச்சைக் குழு, ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஆதரவை வழங்கியிருந்தன.

உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அப்துல் ரசீது தன்ஸீல் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ரிஷாத் தரப்பு வசமானது செட்டிகுளம் பிரதேச சபை

## உப தவிசாளர் பதவி தமிழரசுக் கட்சிக்கு





வவுனியா, ஜூன் 24

வவுனியா வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் ரிஷாத் தரப்பு உறுப்பினர் தாஜ/தீன் முகமது இம்தியாஸ் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தேவசகாயம் சிவனாந்தராசா உப தவிசாளராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச சபைக்கான தவிசாளர், உப தவிசாளர தெரிவு, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி தலைமையில், சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இன்று மாலை நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் தெரிவைப் பகிரங்கமாக நடத்துமாறு 12 உறுப்பினர்களும், இரகசியமாக நடத்துமாறு 6 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தவிசாளர் தெரிவு பகிரங்கமாக நடத்தப்பட்டது.

அந்தவகையில் தவிசாளராகப் பெயர் பிரேரிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இம்தியாஸ/க்கு ஆதரவாக 11 வாக்குகளும், தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட தாவீது இசையாஸ் மிராலுக்கு 6 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன.

இதனடிப்படையில் முகமது இம்தியாஸ் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு ஆதரவாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூன்று உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இரண்டு உறுப்பினர்ளும், ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் நான்கு உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தேவசகாயம் சிவானந்தராசாவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

உப தவிசாளராக வேறு நபர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாத நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தேவசகாயம் சிவானந்தராசா அந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை, சுயேச்சைக் குழு உறுப்பினர் ஒருவர் தவிசாளர் தெரிவின் போது வெளிநடப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது..

# மன்னாரில் தந்தை செல்வாவின் சிலை உடைப்பு







மன்னார், ஜூன் 24

மன்னார் நகர மத்தியில் மாவட்ட செயலகத்துக்கு முன் அமைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் சிலை இன்று புதன்கிழமை அதிகாலை ஒரு கும்பலால் உடைக்கப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்ட சம்பவம் குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை முக்கியஸ்தர்கள் இன்று காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தந்தை செல்வாவின் உருவச் சிலையில் காணப்பட்ட அவரது தலை முழுமையாக அகற்றப்பட்ட நிலையில் அவரது சிலைக்கு அருகில் இருந்து தலைப்பாகம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்தை அறிந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஆகியோர் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பொலிஸார் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு
கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk